Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 3, 2021

புதன்கிழமை ஒகஸ்ட் 03, 2021 | ஒளி: 06 கதிர் 066 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



## எரிபொருள் நிரப்பவே சீன கப்பல் வருகிறது

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

சீனாவின் ஆய்வுக் கப்பலான யுவான் வேன்க் - 5 , எரிபொருள் மற்றும் வேறு தேவைகளுக்காகவே ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரவுள்ளதாகவும், நாட்டிற்குள் வேறு எந்த செயற்பாடுகளையும் முன்னெடுக்க இக்கப்பல் வரவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியிடமும் அமைச்சரவையிலும் அறிவித்தார் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சர்வகட்சி அரசாங்கத்தில்


# தமிழர்களுக்கு தீர்வு வேண்டும்



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உட்பட காணிப் பிணக்குகள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் சர்வகட்சி அரசாங்கத்தின் பொது வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கான பொது வேலைத்திட்டத்துக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின்பங்களிப்பை கோரிக்கையாக விடுத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்துக்கு பதிலளித்து, தமிழ் மக்களின் சார்பில் பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எழுதிய பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2




## நல்லூர் கொடியேற்றம்...

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம், நேற்று (02) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
(மேலதிக படங்கள் P4)

அமெரிக்காவின் ட்ரோன் தாக்குதலில்

## அல்-கொய்தா தலைவர் அல்- ஜவாஹிரி கொல்லப்பட்டார்



காபூல்: அல்-கொய்தா அமைப்பின் தலைவர் அய்மான் அல்- ஜவாஹிரி கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படை நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அல்-கொய்தா அமைப்பின் நிறுவனர் ஒசாமா பின்லேடன் 2011ல் பாகிஸ்தானில் பதுங்கி இருந்தபோது அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டார்.

தொடர்ச்சி P2

## 19இல் இல்லாதவை 22இல் உள்ளன

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்ற அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாக தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்படாத பல ஜனநாயக பண்புகள் 22ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றார்.

தொடர்ச்சி P2

சீன உளவுக் கப்பல் விவகாரம்:

## இந்தியாவுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் எதிர்ப்போம்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

■ சகா



தற்போது நாட்டுக்கு வந்திருக்கின்ற சீன உளவுக் கப்பல், இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகமாக இருக்குமானால் அதை நாங்கள் வன்மையாக எதிர்ப்போம் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சீன உளவுக்கப்பல் இலங்கை வந்திருப்பது குறித்து கருத்துரைத்த அவர் மேலும் கூறுகையில்,

“இந்தியாவுக்கு அண்மித்த பிரதேசத்தில் இலங்கை இருக்கின்றது. ஆகவே தான் போர்சிட்டி விடயத்திலும் நாங்கள் இதனைக் கூறி இருந்தோம்.

தொடர்ச்சி P2

## ஓரின சேர்க்கையாளருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி



வெலிசர - மஹாபாகே பகுதியைச் சேர்ந்த ஓரின சேர்க்கையாளர் (லெஸ்பியன்) ஒருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வத்தளை நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது

ஓரினச்சேர்க்கை மனதின் நோயோ அல்லது குற்றமோ அல்ல என்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சமர்ப்பித்ததை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதையடுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

22 வயதான ஓரின சேர்க்கையாளரான பெண்ணுக்கு எதிராக வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் வெலிசர மஹாபாகே பொலிஸாரின் உதவியுடன் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்தனர்.

தொடர்ச்சி P2

## சிலிண்டர்களின் புதிய விலைகள்

வெற்று எரிவாயு சிலிண்டர்களின் புதிய விலையை லிட்ரோ நிறுவனம் நேற்று (02) அறிவித்துள்ளது. அதன்படி, 2.5Kg சிலிண்டர் 7,000 ரூபாய், 5Kg சிலிண்டர் 11, 000 ரூபாய், 12.5Kg சிலிண்டர் 14,000 ரூபாய் 37.5Kg சிலிண்டர் 35, 000 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேபோல் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் சமையல் எரிவாயுவின் விலையை குறைக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளதாகவும். 50 ரூபாயில் இருந்து விலைகள் குறைக்கப்படும் எனவும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க

## பொது இணக்கத்துக்கு விரைவில் வருவோம்

### இராஜதந்திரிகளிடம் அமைச்சர் அலி சப்ரி எடுத்துரைப்பு



நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை சர்வதேச சமூகத்திலுள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்துரையாடி விரைவாகத் தீர்ப்பதற்கான அர்ப்பணிப்புடன் ஜனாதிபதி செயற்படுவதாகவும், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைத்து நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. விரைவில் பொது இணக்கத்துக்கு வருவதற்கு முயற்சிக்கின்றோம் எனவும் கொழும்பில் உள்ள தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களிடத்தில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இலங்கையின் நகர்வுகளை உன்னிப்பாக அவதானிக்கின்றோம்



இலங்கையின் அரசியல் மாற்றம், வேகமாக நகரும் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார சவால்களைத் தீர்ப்பதற்கு அமைதியான, ஜனநாயக மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையைக் கண்டறிய அனைத்துத் தரப்புகளையும், ஊக்குவிப்பதாக இங்கிலாந்தின் வெளிவிவகார பொதுநலவாய இணை அமைச்சர் அமண்டா மில்லிங் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## முதலில் நுழைந்தவர் சிக்கினார்

போராட்டம் இடம்பெற்ற ஜூலை 9 ஆம் திகதியன்று ஜனாதிபதி செயலகத்துக்குள் முதலில் நுழைந்து, போராட்டக்காரர்களை நுழைவதற்கு வழிசமைத்தார் என்றக் குற்றசாட்டில் கைது செய்யப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



### இ.தொ.கவுடன் பேச்சு

சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து ஜனாதிபதி,பிரதமர் ஆகியோர் இ.தொ. காவுடன் கலந்துரையாடலை முன்னெடுத்தனர்.
இதில், இ.தொ கா தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

## கூட்டியதை குறைக்கவும் குறைக்கவும்

கொவிட் காலத்தில் அதிகரிக்கப்பட்ட தனியார் பஸ் கட்டணங்களை, நூற்றுக்கு 20 சதவீதம் குறைக்குமாறு போக்குவரத்து அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. எனினும், டீசலின் விலை 10 ரூபாவினால் குறைத்துள்ளமையானது. பஸ் கட்டணத்தின் மீது செலுத்தப்படும் அழுத்தம் மிகவும் குறைவாகும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலான் மிருண்டா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



சீரற்ற வானிலை

## அக்கரகந்தயில் மூவர் மாயம்

■ எஸ். கணேசன்

சிரற்ற வானிலையால் மலையகத்தில் பல இயற்கை அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன. இதற்கமைய நாவலப்பிட்டி கெட்டபுலா- அக்கரகந்த தோட்டத்தில் மூன்று பேர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (1) பகல் பதிவாகியுள்ளது.

மஹாவலி ஆற்றுக்கு நீரை ஏந்திச் செல்லும் கிளை ஆறான அக்கரகந்த ஆற்றில், மழை அதிகரிக்கும் போது அங்கிருக்கும் பாலத்துக்கு மேலாக நீர் செல்வது வழமையான விடயம் என்பதுடன், இதன்போது கயிற்றின் உதவியுடனேயே மக்கள் பாலத்தை கடப்பதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்

இதன்போது தோட்டத் தொழிலுக்குச் சென்றிருந்த 45 வயதான விஜயலெட்சுமி கயற்றின் உதவியுடன்

தொடர்ச்சி P2

இயற்கை அனர்த்தங்களால்

## மூவர் மரணம்; மூவர் மாயம்

நாடளாவிய ரீதியில், யாழ்ப்பாணம், நுவரெலியா, கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட மண்சரிவு, வெள்ளம் மற்றும் கடுங்காற்று ஆகிய இயற்கை அனர்த்தங்களால், மூவர் மரணமடைந்துள்ளனர் மற்றும் மூன்று பேர் காணாமல் போயுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

மூன்றாவது கூட்டத்தொடர் ஆரம்ப விழாவில்

## ஜனாதிபதியின் இலட்சினை, கொடி மரியாதை வேட்டுக்களும் இல்லை

### எளிமையாக ஆரம்பித்து வைக்கிறார் ஜனாதிபதி ரணில்

■ பா.நிரோஸ்

9ஆவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் வைபவரீதியாக இன்று (03) எளிமையாக ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வில் முப்படையினரின் மரியாதை அணிவகுப்பு நடைபெறுகின்ற போதிலும், மாரியாதை வேட்டுக்கள் தீர்த்தல், வாகனத் தொடரணி என்பன இடம்பெறாது.

இந்நிகழ்வுக்கான ஒத்திகை நிகழ்வுகளில் நேற்று(02) முப்படையினர் மற்றும் பொலிஸார், ட

தொடர்ச்சி P2



## கொவிட் மரணங்களும் தொற்றுகளும் கூடும்

ஜூலை ஆரம்பத்தில் கட்டுப்பாட்டில் இருந்த கொவிட் வைரஸ் பரவல் தற்போது வேகமாக பரவிக்கொண்டுள்ளது. இனி வரும் காலங்களில் கொவிட் மரணங்கள், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன என சுகாதார அமைச்சின் கொவிட் வைரஸ் பரவல் செயற்பாடுகளின் பிரதான தொடர்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# எரிபொருள் நிரப்பவே சீன கப்பல் வருகிறது

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் நேற்று (2) கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். அயல் நாடுகளாகவும் இலங்கையுடனான நட்புறவு நாடுகளாகவும் இருக்கும் சீனாவும் இந்தியாவும் இலங்கை மோசமான நிலையை எதிர்கொள்ளும் போது உதவி செய்யும் நட்பு நாடுகளாகும். எனவே இந்த இரண்டு நாடுகளுடனும் இராஜதந்திர ரீதியில் செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

# அல்-கொய்தா தலைவர் அல்- ஜவாஹிரி கொல்லப்பட்டார்

அதன்பின் அல்-கொய்தா அமைப்பை அல்- ஜவாஹிரி. வழிநடத்தி வந்தார்

இவர் ஆப்கானிஸ்தானில் தங்கியிருந்து தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். சில நேரங்களில் குறிப்பாக, இந்திய விவகாரங்களில் வீடியோக்களில் தோன்றி பேசிவந்தார்.

அமெரிக்காவில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட அவர், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் ஓகஸ்ட் 1 ஆம் திகதி அவர் கொல்லப்பட்டார் எனக் கூறப்பட்டுள்ளது. காபூலில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் அல்- ஜவாஹிரி கொலை செய்யப்பட்டார் என்பதை அமெரிக்க அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேபோல், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அந்த தகவலை உறுதிப்படுத்தியோடு, இதை “வெற்றிகரமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை” என்றும் கூறியுள்ளார்.

# முதலில் நுழைந்தவர் சிக்கினார்

கொம்பனி தெரு விசேட விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை அடையாள அணிவகுப்பில் உட்படுத்துவதற்காக, எதிர்வரும் 5 ஆம்திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (02) கட்டளையிட்டார்.

# கூட்டியதை...

பஸ் கட்டணத்தின் மீது செலுத்தப்படும் அழுத்தம் மிகவும் குறைவாகும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

கொவிட் காலத்தில் பஸ்களின் இருக்கைகளின் அடிப்படையில் பயணிகளை ஏற்றிச்சென்றமையால், அந்த 20 சதவீதமான கட்டணம் அதிகரிக்கப்பட்டது. எனினும், அந்த சட்டம் தற்போதைய செயற்பாட்டுக்குள் வராது என்பதனால், கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும் மிரண்டா தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கட்டணங்களை குறைப்பதற்கு அனுமதி கிடைக்குமாயின் 10 ரூபாவினால் டீசல் குறைக்கப்பட்டதில் இருந்தும் கிடைக்கும் ஆதாயத்தையும் சேர்த்துக்கொள்வதற்கான இயலுமை உள்ளது என்றார்.

# ஜனாதிபதியின்...

கொழும்பு தேவிபாலிகா வித்தியாலய மாணவியர் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டிருந்தனர். ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகை தரும் நிகழ்வை மிகவும் எளிமையான முறையில் நடத்துமாறு ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல் மற்றும் வாகனத் தொடரணி என்பன இடம்பெறாது என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார்.

எனினும், ஜனாதிபதியை வரவேற்பதற்காக பாராளுமன்ற முன்றலில் முப்படையினரும் ஜனாதிபதிக்கு அணிவகுப்பு மரியாதையளிக்கவுள்ளனர். இதன்போது ஜனாதிபதியின் கொடி ஏற்றப்படாது என்பதுடன், தேசியக் கொடி மாத்திரம் ஏற்றிவைக்கப்படும்.

இன்று (03) காலை 09.30 மணிக்கு விசேட விருந்தினர்களின் வருகை இடம்பெறவிருப்பதுடன், இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலில் வருகை தர உள்ளனர். இதனைத் தொடர்ந்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் வருகையும், அதன் பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் வருகையும், அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகையும் இடம்பெற உள்ளது.

இம்முறை ஜனாதிபதியின் ஆசனத்தில் ஜனாதிபதியுடைய இலட்சினைக்கு பதிலாக அரசாங்கத்தின் இலட்சினை பொருத்தப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். இதன்போது சபாநாயகர், பாராளுமன்ற குழுநிலையின்போது அமரும் கீழ் பகுதியிலுள்ள ஆசனத்தில் செயலாளர் குழுவுடன் அமர்ந்திருப்பார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தப்படும், சபை ஒத்திவைக்கப்படும். சபை ஒத்திவைக்கப்பட்டதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# திருத்தம்

ஒகஸ்ட் 02 ஆம் திகதிய எமது மின்னிதழில் “ஆடி மழை” எனும் தலைப்பின் கீழான தலைப்புச் செய்தியில் ஆடி மாதம் ஓகஸ்ட் 3ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஆர்)

# தமிழர்களுக்கு தீர்வு வேண்டும்

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டமியற்றுதல், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் அரசியலமைப்பு விதிகளை முழுமையாக அமுல்படுத்துவதை மேற்பார்வையிடும் ஒரு குழுவை அமைப்பது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உறுதி செய்வதற்குத் தேவையான நிர்வாக மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளை இந்தக் குழு பரிந்துரைக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது குற்றம் சாட்டப்பட்டு நீண்ட காலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்பு படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவித்தல்.

பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றில் நாட்டின் இன விகிதாசாரத்தைப் பிரதிநிதித்து வப்படுத்துவதை உறுதி செய்வதற்கான திட்டத்தை உருவாக்குதல். அரச விழாக்களில் இரு மொழிகளிலும் (சிங்களம் மற்றும் தமிழ்) தேசிய கீதத்தைப் பாடுவது. தனிநபர்கள், புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் மீதான தடையை நீக்குதல்.18 வயதை அடைந்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டில் வசிப்பவர்கள் மற்றும் வேலைக்காக வெளிநாட்டில் இருப்பவர்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கும் வகையில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருதல் உள்ளிட்ட மேலும் சில காரணிகளையும் முன்மொழிந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதானது உங்களது பொது வேலைத்திட்ட முயற்சிக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகவும் அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 19இல் இல்லாதவை 22இல் உள்ளன

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று(2) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை 7 நாள்களின் பின்னர் பாராளுமன்றத்தில் முதல் வாசிப்புக்காக முன்வைக்கப்படவுள்ளதாகவும், இது 22ஆவது திருத்தம் என்றாலும் 21ஆவது திருத்தமாகவே கருதப்படும் என்றார். அடிப்படையில் 19ஆவது திருத்தமானது பல பலவீனங்களை கொண்டிருந்ததுடன், அவற்றை அடையாளம் கண்டு, அவற்றை நீக்கி 20ஆம் திருத்தத்தில் உள்ள சில நல்ல விடயங்களை இதில் உள்ளடக்கியுள்ளோம் என்றார்.

அரசியலமைப்பு பேரவைக்கு பாராளுமன்ற உறுப்பினர் மூவர் தெரிவு செய்யப்படும் போது பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் திருத்தம் செய்யப்பட்டு, அந்தந்த கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் மத்திய வங்கி ஆளுநரை நியமிப்பதற்கு முன்னர், அரசியலமைப்பு பேரவையின் அனுமதியை ஜனாதிபதி பெற வேண்டும்.

நிதிச் சபையில் உத்தியோகப்பூர்வமற்ற உறுப்பினர்களின் நியமனத்துக்கு அரசியலமைப்பு பேரவையின் அனுமதி அவசியம். ஜனாதிபதி கட்டாயமாக பாதுகாப்பு அமைச்சு பதவியை வகிக்க வேண்டும். ஊழலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். உடரட்ட திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

19ஆவது திருத்தத்தில் உள்ள ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை முழுமையாக நீக்குமாறு எதிர்க்கட்சி பரிந்துரைத்தாலும் அதனை முன்னெடுக்க அரசியலமைப்பு ரீதியில் எமக்கு சந்தர்ப்பம் இல்லை. அவ்வாறு செய்ய வேண்டுமெனில் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதே அதற்கான தீர்வு என்றார்.

# மூவர் மரணம்; மூவர் மாயம்

ஓகஸ்ட் 1 ஆம் திகதிய புள்ளிவிபரங்களின் பிரகாரம், 1,766 குடும்பங்களைச் சேர்ந்த 7,646 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 25 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களில் 643 குடும்பங்களைச் சேர்ந்த 3,046 பேர், 16 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அக்கரகந்தயில் மூவர் மாயம்

பாலத்தை கடக்க முற்பட்ட போது கை நழுவி ஆற்றில் விழுந்துள்ளார்.

நீரில் அடித்துச் செல்லப்பட்ட பெண்ணை காப்பாற்ற 52 வயதான சத்தியசீலன் மற்றும் 34 வயதான சந்திரமோகன் ஆகியோர் முயற்சித்த போது, அவர்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்களை தேடும் பணிகளுக்காக நேற்று (2) பகல் 12 மணியளவில் கொத்மலை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வருகைத் தந்துள்ளதுடன் நாவலப்பிட்டி பொலிஸாரும் இணைந்து, காணாமல் போனவர்களைத் தேடும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கோவிட் மரணங்களும்...

பொதுமக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் மட்டுமே வைரஸ் பரவலில் இருந்து தப்பிக்க முடியும். வைரஸ் பரவலை தடுப்பது சமூகத்தின் கூட்டுப்பொறுப்பாகும். ஆகவே இதற்கு முன்னர் வலியுறுத்தப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும். அதேபோல் சிறுவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். பாடசாலைகள் மீண்டும் மூடப்பட்டால் பல்வேறு சமூக பிரச்சினைகள் ஏற்படும் அபாயமும் நிலவுகின்றது என்றார்.

அதேபோல் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் நபர்கள் கண்டிப்பாக முகக்கவசம் அணியவேண்டியது கட்டாயமாகும் என்றார்.

முதல் இருந்ததை விடவும் இப்போது நோய் அறிகுறிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உடல் வலி, வாந்தி மற்றும் காய்ச்சல், அதேபோல் முதல் இருந்த வழமையான நோய் அறிகுறைகள் காணப்படுகின்றன. புதிய ஒமிக்ரோன் வைரஸ் பரவலில் நோய் அறிகுறிகள் வெளிப்படுவது குறைவாகும். ஆனால் மூச்சடைப்பு, மற்றும் காய்ச்சல் காணப்படும். எவ்வாறு இருந்தாலும் மீண்டும் பழைய யுகத்திற்கு நாம் முகங்கொடுக்க நேரிடுமோ என்ற அச்சம் எம்மத்தியில் உள்ளது என்றார்.

# ரணிலை நீக்குவதா? இல்லையா? தீர்மானம் ஒத்திவைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில் இருந்து அவரை நீக்குவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பிலான தீர்மானத்தை எட்டுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை தடுத்து நிறுத்த தவறியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களில், பிரதிவாதியாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். பிரதிவாதியிலிருந்து நீக்குவதா? இல்லையா? என்பது தொடர்பிலான தீர்மானமே, எழுவர் அடங்கிய நீதியரசர் குழாமினால் இன்று (02) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனெக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, எல்.டீ.பீ தெஹிதெனிய, மூர்து பெர்னாண்டோ, எஸ். துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு அழைக்கப்பட்ட போது பிரதிவாதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதால், பிரதிவாதி என்பதில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவின் நீக்கவேண்டுமென நீதிமன்றத்திடம் கேட்டுக்கொண்டார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம், ஜனாதிபதிக்கான விடுவிப்பு சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மட்டுமே உள்ளன. இது அடிப்படை உரிமை மீறல் வழக்காகும் என்பதால், பிரதிவாதியாகவே அவர் பெயர் இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# ஒரின சேர்க்கையாளருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

அவர் லெஸ்பியன் என்பதால் மனநலம் பாதிக்கப்பட்டவர் என அறிவிக்கக் கோரி மனு தாக்கல் செய்தனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர்கள் வயது வந்த பெண்ணை சட்டவிரோதமாக அடைத்துவைத்து, துஷ்பிரயோகம், துன்புறுத்தல் மற்றும் கட்டாய மதமாற்ற சேவைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

# இலங்கையின் நகர்வுகளை உன்னிப்பாக அவதானிக்கின்றோம்

இது தொடர்பில் எழுத்துப்பூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், உலக வங்கி, மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற பலதரப்பு நிறுவனங்கள் மூலம் இங்கிலாந்து பொருளாதார ஆதரவை வழங்குவதாகவும், சர்வதேச நாணய நிதியத்தில் ஐக்கிய இராச்சிய கூட்டமைப்பு, ஐந்தாவது பெரிய பங்குகளைக் கொண்டுள்ளது, அத்துடன் ஐக்கிய நாடுகள் மற்றும் உலக வங்கிக்கும் முக்கிய பங்களிப்பாளராக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் பரிஸ் கிளப் உறுப்பினர்கள் மற்றும் உலக வங்கி உட்பட பலதரப்பு அமைப்புகளுடன் இங்கிலாந்து நெருக்கமாக பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் எதிர்ப்போம்

“இந்தியாவுக்கு அண்மித்த சூழலில் இலங்கை இருப்பதால் அதன் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்குமாக இருந்தால் அதனை நாங்கள் எதிர்ப்பது தார்மீகமாகும். அதற்காக சீனாவுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.

“சிலவேளை இலங்கை தென் சீன கடலிலே இருந்து அங்கு இந்திய உளவுக்கப்பல் அங்கு தரிக்குமானால் அது சீனாவின் பாதுகாப்புக்கு குந்தகமாக இருக்கும். அப்பொழுது நாங்கள் இந்தியாவுக்கு எதிர்ப்பாக தீர்மானம் எடுப்போம்.

“ஆனால், இங்கு சீனாவுக்கு தூரமாக இந்தியா இருக்கின்றது. ஆகவே, இந்தியாவுக்கு அருகாமையில் நாங்கள் இருப்பதால், நாங்கள் இந்த சீனக் கப்பல் இலங்கைக்கு வந்திருப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்” என்றார்.


# பொது இணக்கத்துக்கு விரைவில் வருவோம்

வெளிவிவகாரத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற இராஜதந்திரிகளுக்கான முதலாவது சந்திப்பில், புதிய ஜனாதிபதியின் தெரிவு மற்றும் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட முக்கிய அபிவிருத்திகள் குறித்து வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்வதற்கும் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கும் இட்டுச் சென்ற இலங்கையின் அண்மைக்கால அரசியல் நிகழ்வுகளை அமைச்சர் தெளிவுப்படுத்தியதுடன், இது தொடர்பான செயன்முறைகள் ஜனநாயக அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் இடம்பெற்றதாகவும், நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை சர்வதேச சமூகத்திலுள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் மிக அதிக முன்னுரிமையுடன் கலந்துரையாடி விரைவாகத் தீர்ப்பதற்கான அர்ப்பணிப்புடன் ஜனாதிபதி செயற்படுவதாகவும் வலியுறுத்தியுள்ளார். தற்போதைய சமூகப் பொருளாதார சூழலில் பொருந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளுக்கு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

# கிணற்றில் இருந்து பெண் சடலமாக மீட்பு

**கனகராசா சரவணன்**



மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு பிரதேசத்தில் வீடு ஒன்றின் கிணற்றில் இருந்து வயோதிப பெண் ஒருவரின் சடலம், நேற்று (02) மீட்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களர்பு, வெளிச்ச வீட்டுவீதி பாலமீன்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயதுடைய வள்ளித்தங்கம் கந்தசாமி என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தினிமையில் வசித்துவந்த நிலையில், சம்பவதினமான நேற்றுக் காலையில் அவரின் பிள்ளைகள் அங்கு சென்றபோது அவரை வீட்டில் காணாத நிலையில், அங்கு தேடியபோது அவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் இருப்பதை கண்டு பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நீதிமன்ற அனுமதியை பெற்று, கிணற்றில் இருந்து சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோட்டாவுக்கும் சலுகைகள் இல்லை

**சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர்**



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் விசேட சலுகைகளையோ, மருத்துவ அல்லது விருந்தோம்பல்களை வழங்கவில்லை என சிங்கப்பூர் வெளிவிவகாரத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட அரச எதிர்ப்பு போராட்டத்தை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள நிலையில், இது குறித்து சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் ஜெரால்ட் கியாம் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் அரசாங்கம் வழமையாகவே முன்னாள் அரச தலைவர்கள் அல்லது தலைவர்களுக்கு சலுகைகள், மற்றும் விருந்தோம்பல் ஆகியவற்றை வழங்குவதில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அதுவே நடைமுறையாகும். ஆகவே இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எந்தவித சலுகைகளோ, விருந்தோம்பலோ வழங்கப்படவில்லை என பாலகிருஸ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

தனது குறுகிய கால வருகை வீசாவை கோட்டாபய ராஜபக்ஷ, நீடித்துள்ள நிலையில், அவர் ஒகஸ்ட் 11 வரை சிங்கப்பூரில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 24 மணிநேரமும் ஒட்டு கேட்கப்படுகிறது



ஜனாதிபதி தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது அதிகளவான பணப் பறிமாற்றம் கைமாற்றப்பட்டது எனவும், அதேபோல் தனது தொலைபேசி 24 மணிநேரமும் ஒட்டு கேட்கப்படுகிறது. இதற்கு யார் உத்தரவிட்டார்கள் என்பதை இனி வரும் காலங்களில் வெளிப்படுத்துவேன் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக எனது எதிரியாக இருந்தாலும் கூட அவரை நான் தனிப்பட்ட ரீதியில் விமர்சித்தது கிடையாது. மத்திய வங்கியின் கொள்ளையன், ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி, பட்டலந்த போன்ற எந்தவொரு குற்றச்சாட்டுக்களையும் ரணில் மீது சுமத்தி விமர்சித்தது இல்லை. குறிப்பாக 2005ஆம் ஆண்டு தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவை தனிப்பட்ட ரீதியில் தாக்கும் 40 ஆயிரம் போஸ்டர்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இதற்கு நான் எதிர்ப்பு தெரிவித்து அனைத்து போஸ்டர்களையும் எரித்தேன். இதனை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நன்கறிவார் என்றார்.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போது வரையில் நடைபெற்ற அனைத்து பொதுத் தேர்தல்களின் போதும் ரணிலை எதிர்த்தே நாம் போட்டியிட்டிருக்கிறோம். நான் எனது அணிக்கு துரோகமிழைக்கவில்லை. இவ்வாறான நிலையில் எமக்கு அரசியல் எதிரியாக இருக்கும் ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக எமது கட்சியே முன்னிறுத்தியது என்றார்.

# வெறுப்பினால் வெறுப்பை வெல்லவே முடியாது



இலங்கை சுதந்திரம் பெற்றதற்குப் பின் இடம்பெற்றவையை திரும்பிப் பார்ப்பதற்கான காலம் வந்துள்ளது. அப்போது ஆசியாவின் வளமிக்க நாடாக விளங்கிய நாம் தற்போது ஏழை நாடாக மாறியதற்கான காரணங்களை கண்டறிய வேண்டியுள்ளது என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியா தெரிவித்துள்ளார். நாட்டின் அனைத்து தரப்பினரும் வெறுப்பை தவிர்த்து நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கமும் இனம் மற்றும் மத நல்லிணக்கத்திற்கான கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த ' சிறந்த நாட்டுக்கான புதிய அரசியல் அமைப்பு' காலி மாவட்டத்திற்கான செயலமர்வின் போது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இதனை தெரிவித்துள்ளார்.

இனம் மற்றும் மத பேதங்களைக் கடந்து , நீதியான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. நாம் எந்த ஒரு கட்சிக்கும் சார்பானவர்கள் அல்ல. அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சிறந்த செயல்களை பாராட்டும் அதேவேளை தவறுகளையும் கடுமையாக விமர்சிப்போம். எமக்கு நாட்டுப்பற்று உள்ளது. ஜனநாயகம் மேலோங்கி இருக்கும் சமூகத்தில் வாழ்ந்து மடிவது எமது ஒரே எதிர்பார்ப்பாகும்.

நாம் அன்று முதல் 19 ஆவது திருத்தத்தை மீள் அமல்படுத்தும்படி குரல் எழுப்பினோம். 2015ல் மேற்படி திருத்தத்தை கொண்டு வந்ததின் பின் இலங்கை நாகரீகமடைந்த நாடாக சர்வதேச நண்மதிப்பை பெற்றது. அரசு இயந்திரத்தின் மீது அரசியல் அச்சுறுத்தல்கள் அகற்றப்பட்டது. அரசு அதிகாரிகளுக்கு சுயமரியாதையுடன் வேலை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. நாட்டின் வீழ்ச்சி, பொருளாதார நெருக்கடி, ஊழல், சட்ட ஒழுங்கு சீர்கேடுகள் போன்ற அனைத்தும் 20ஆவது திருத்தத்தின் ஊடாக வழங்கப்பட்ட எல்லையற்ற அதிகாரங்களின் காரணமாகவே தோற்றுவித்தது. நாட்டின் பெருமளவிலான மக்கள் 20 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

மேலும் நாட்டின் அனைத்து தரப்பினரும் வெறுப்பை தவிர்த்து நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாம் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் பாரிய நெருக்கடிகளை வெற்றி கொள்வதற்கு பிரிவினைகளை தவிர்க்க வேண்டும். இந்த நடவடிக்கைகளில் வெற்றி கொள்வதற்கு நாம் சிந்தித்து செயல்பட வேண்டும். ஆட்சியில் இருக்கும் அனைவரும் இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# ஹெலியில் மன்னாருக்கு திடீரென விரைந்த ரவி

**எஸ்.றொசேரியன் லெம்பேட்**



முன்னாள் நிதி அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தருமான ரவி கருணாநாயக்க, மன்னாருக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

விசேட ஹெலிகெப்டர் மூலம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை அவர் வந்தடைந்தார்.

மன்னாருக்கான இந்தத் திடீர் விஜயம் குறித்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது, எவ்வித பதிலும் கூறாமல் அவ்விடத்தில் வந்த வாகனத்தில் ஏறிச் சென்று விட்டார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் ரி.எஸ்.எப் (T.S.F) என அழைக்கப்படும் தனியார் கடல் உணவு உற்பத்தி நிலைய பிரதிநிதிகளும் வருகை தந்த நிலையில், அவர்களின் வாகனத்திலேயே அவர்களுடன் அவர் சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.



# ஒத்துழைப்போம் ஏற்கமாட்டோம்

**பா.நிரோஸ்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் நல்ல வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்கினாலும், அந்த அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஒருபோதும் ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொள்ளாது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மக்கள் அமைதியான நாட்டையே விரும்புகிறார்கள். நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்றால் சரியான பொருளாதாரக் கொள்கை ஒன்று அவசியம். சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். நாளை (இன்று 03) நடைபெறவுள்ள ஜனாதிபதியின் அக்கிராசன உரையின்போது ஜனாதிபதி இது தொடர்பில் என்ன கூறுகிறார் என்பதை பார்க்க முடியும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் நாம் இருந்திருக்கிறோம். எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கைக்கும் பாரிய வித்தியாசங்கள் இல்லை எனவும் தெரிவித்தார்.

# சஜித் ஒருவாரத்துக்குள் தீர்மானிக்க வேண்டும்



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எனது சகோதரர், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனது அரசியல் ஆசான் என தெரிவித்துள்ள அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவது தொடர்பில் சஜித் ஒரு வாரத்திற்குள் தீர்மானம் ஒன்றுக்கு வரவில்லை என்றால், சஜித்துக்கு பெரும் அரசியல் நெருக்கடி காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்வது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உரிய தீர்மானம் ஒன்றை ஒரு வாரத்துக்குள் எடுக்கவில்லை என்றால், அக்கட்சியிலிருந்து பலர் அரசாங்கத்துடன் இணைந்துகொள்வார்கள். சஜித் பிரேமதாஸவின் அரசியல் வரலாற்றில் இது பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பங்குதாரராக நானும் இருப்பதால், அக்கட்சி இரண்டாக பிளவுபடுவதை நான் விரும்பவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒன்றாக இணைப்பேன். ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளையே ஐக்கிய மக்கள் சக்தி கொண்டிருக்கிறது என்றார்.

# ரணிலை நீக்குமாறே அழுத்தம் கொடுத்தது



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னர், அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவையும் பிரதமர் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென அமெரிக்கா கோட்டாவுக்கு அழுத்தம் கொடுத்ததாக சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இறுதியாகக் கிடைத்த தலைவிதி தொடர்பில் தான் மகிழ்ச்சியடையப்போவதில்லை எனவும் விமல் கூறியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, பொதுமக்களின் பணத்தை ஒருபோதும் கொள்ளை அடித்ததில்லை. ஆடம்பரமாக அவர் செலவு செய்ததில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது ஐந்து வருடகால ஆட்சி நிறைவடைந்ததும் அமெரிக்காவில் உள்ள தனது பிள்ளை, பேரப்பிள்ளையுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். அதற்காக அமெரிக்காவை பகைத்துக்கொள்ள கூடாது. அதனால் கவனமாக இருக்க வேண்டும் என நினைத்துக்கொண்டிருந்தார். கோட்டாவுக்கு உளரீதியாக இந்த தடையே இருந்தது என்றார்.

வாரத்தில் மூன்று தடவை கோட்டாபய ராஜபக்ஷவை அமெரிக்க தூதுவர் சந்தித்து கலந்துரையாடி கோட்டாவிடமிருந்த உள ரீதியான தடையை அதிகரித்துச் செல்வார். அமெரிக்கா கூறிய அனைத்தையும் கோட்டா செய்தார் என நான் கூறவில்லை. கோட்டா ஜனாதிபதி பதவியிலிருந்து விலகும்போது அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவையும் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென அமெரிக்கா கோட்டாவிடம் வலியுறுத்தியது.

ரணிலை பிரதமர் பதவியிலிருந்து விலக்கியிருந்தால், சபாநாயகரே பதில் ஜனாதிபதியாகச் செயற்பட்டிருப்பார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் கொள்ளளவு எவ்வளவு என்பது எமக்கு தெரியும் என்றார்.

ஒருவேளை பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் நியமிக்கப்பட்டிருந்தால் நாட்டின் நிலைமை என்னவாகியிருக்கும் என்பது தெரியாது என்றார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு முன்னாள் நிதி அமைச்சர் பசில் கோட்டாபய ராஜபக்ஷவும், ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவுமே காரணமானவர்கள் என்றார்.




# நிறைவேற்று அதிகாரமே மீறல்களுக்கு காரணம்

இலங்கையில் இன்று இடம்பெற்றுக்கொண்டுள்ள மனித உரிமை மீறல்கள், வடக்கு, கிழக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன. எனவே இன்றைய மனித உரிமை மீறல்கள் தொடர்பான கண்காணிப்பானது கடந்தகால மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டுவர மேலும் பலம் சேர்க்கும் எனவும் ஜெனிவா கூட்டத்தொடரில் இவை கருத்தில் கொள்ளப்படும் எனவும் ஜனநாயக போராட்டங்களுக்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

## கிழக்கு மாகாண நிறுவனங்களின்
# தலைவர்களுக்கு திடீர் இடமாற்றம்

**ஹஸ்பர், நூருள் ஹுதா உமர், பைஷல் இஸ்மாயில்**

கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக ஒரே பதவியில் கடமையாற்றிய திணைக்களத் தலைவர்கள் குழுவொன்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் ஆலோசனைக்கு அமைய, இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக ஒரே திணைக்களத்தில் பணிபுரிந்ததாலும், அந்தப் பதவிகள் தொடர்பான தகுதிகளை பூர்த்தி செய்யாததாலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்தில்கொண்டு, மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்கவுக்கு, ஆளுநர் இடமாற்ற அறிவுரை வழங்கினார்.

அதன்படி, மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளராக கடமையாற்றியவர் மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக திருமதி வளர்மதி நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய என். திரு. சிவலிங்கம், மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கூட்டுறவு ஆணையாளராக கடமையாற்றிய ஏ.எல்.எம். அஸ்மி, கல்முனை மாநகர சபை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



# பழைய பதவியை ஏற்றார் நிமல்



பாராளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சராக நேற்று (02) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து, அவரை அமைச்சர் பதவியில் இருந்து அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீக்கியிருந்தார்.

அதன்பின்னர், குழுவொன்று விசாரணை நடத்தியது. அதன் அறிக்கை ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

அதில், நிமல் சிறிபாலடி சில்வாவின் மீதான குற்றச்சாட்டுகள் எவையும் நிரூபிக்கப்படவில்லை. அதன்பின்னர், தன்னுடைய அமைச்சுப் பதவியை நிமல் சிறிபாலடி சில்வா ஏற்றுக்கொண்டார்.

மாகாண திணைக்களத் தலைவர்களுக்கு

# உடனடி இடமாற்றம்

■ பைஷல் இஸ்மாயில்

கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக ஒரே பதவியில் கடமையாற்றி வந்த சில மாகாண திணைக்களத் தலைவர்களை, வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தால், மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்கவிற்கு விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளராக கடமையாற்றிய திருமதி ஆர். வளர்மதி, மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய என்.சிவலிங்கம் மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண கூட்டுறவு ஆணையாளராக கடமையாற்றிய ஏ.எல்.எம்.அஸ்மி, கல்முனை மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கலாசார பணிப்பாளராக கடமையாற்றிய எஸ்.நவநீதன், மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராக பணியாற்றிய (திருமதி) எஸ்.சரணியா, மாகாண கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராகவும், மாகாண கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக பணியாற்றிய ஏ.ஜி. தேவேந்திரன், மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக கடமையாற்றிய கே.இளந்துடுதன், மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள், மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்கவால் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த இடமாற்றங்களைப் பெற்ற அதிகாரிகள், நேற்று (02) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில், ஆளுநர் அநுராதா யஹம்பத்தை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இக்கலந்துரையாடலின்போது, இடமாற்றங்களைப் பெற்றவர்கள் தங்களின் கருத்துகளைத் தெரிவித்தனர்.

இடமாற்றங்களைப் பெற்ற சகல அதிகாரிகளும் தங்களுக்கான கடமைகளை உடனடியாக பொறுப்பேற்றுக்கொள்ளுமாறும், அதில் எந்த மாற்றங்களும் இடம்பெறாது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர், சகல அதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ளார்.

# பதுக்கிய டீசலுடன் ஒருவர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம் நூர்தீன்



மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி செல்வாநகரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 135 லீற்றர் டீசலுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

ஆரையம்பதி, செல்வநகர் கிழக்கு பிரதேசத்தில் டீசலை பதுக்கி வைத்து, அதிகூடிய விலைக்கு விற்பனை செய்வதாக, காத்தான்குடி பொலிஸாருக்கு பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, பெரிய 06 கொள்கலன்களிலிருந்து இவ்வாறு டீசல் மீட்கப்பட்டுள்ளது.

இதில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மெற்கொண்டு வருகின்றனர்.

மோட்டார் சைக்கிள்கள்

# விபத்து; மூவர் படுகாயம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தாங்குடியில் மோட்டார் சைக்கிள் இரண்டு நேற்று (02) அதிகாலை மோதிக்கொண்டமையால் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி பதுறியா சந்தியில் வை.எல். எம் ஹோட்டலுக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி, பிரதான வீதியில் இருந்து பதுறியா வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிளும் புதிய பாலமுனை வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டதிலேயே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த மூவரில் இருவர், மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையிலும் ஒருவர், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரு வீடுகள் ஒப்படைப்பு

■ ஹஸ்பர்







'வாழ்வதற்கான இல்லறம்' எனும் செயற்றிட்டத்தின் கீழ், வன்னி ஹோப் நிறுவனத்தின் ஒருங்கமைப்பில், திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் மேலும் இரு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இவற்றை பயனாளிகளின் பாவனைக்கு ஒப்படைக்கும் நிகழ்வு, மன்றத்தின் தலைவர் எம். ரீ எம். பாரிசின் தலைமையில் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இலுப்பைக்குளம் பிரதேசத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வீடுகள் அற்ற இரு குடும்பங்களுக்கே இவ்வாறு நிரந்த வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டன.

இந்த வீடுகள் நிர்மாணிப்புக்கு ஐக்கிய இராஜியத்தில் வசிக்கின்ற வைத்திய கலாநிதி ஞாணசோதி சுப்பையா மற்றும் அவுஸ்ரேலியாவில் வசித்த அமரர் குமார சுவாமியின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தாரும் நண்பர்களும் நிதி அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக

# கரையொதுங்கும் கஞ்சா மூடைகள்

## கஞ்சா ஏற்றிய படகு கடலில் மூழ்கியதா?

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



தமிழக கடலோரப் பகுதியில் இருந்து இலங்கைக்கு படகில் கஞ்சா கடத்திச் சென்ற போது, நடுக்கடலில் படகு மூழ்கியதில் படகில் இருந்த கஞ்சா மூடைகள் கடலில் விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவை, பாக்ஜலசந்தி கடல் பகுதியில் அடுத்தடுத்து கரை ஒதுங்கி வருகின்றமை தமிழக உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய இரகசிய விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், நேற்று முன்தினம் 0(1) தனுஷ்கோடி அருகே கரை ஒதுங்கிய 96 கிலோகிராம் கஞ்சாவை மரைன் பொலிஸார் பறிமுதல் செய்து போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கைக்கு மிக அருகாமையில் தூத்துக்குடி, இராமநாதபுரம், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்ட கடலோர பகுதிகளில் இருப்பதால் சட்டவிரோதமாக இலங்கைக்கு கஞ்சா, மஞ்சள், கடல் அட்டை, கடல் குதிரை, ஐஸ் போதைப்பொருள் உள்ளிட்டவைகள் சமீப காலமாக அதிகளவு கடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தல் சம்பவங்களை தடுப்பதற்காக இந்திய - இலங்கை கடற்படை சர்வதேச கடல் எல்லையில் பாதுகாப்பு பணியை தீவிரப்படுத்தியுள்ளன.

இந்நிலையில், தமிழக கடலோரப் பகுதிகளில் கஞ்சா மூடைகள் ஒதுக்குவது குறித்து இந்திய மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய ரகசிய விசாரணையில், நாகை மாவட்ட கடற்கரையிலிருந்து பைப்பர் படகு ஒன்றில் இலங்கைக்கு கஞ்சா மூடைகள் கடந்த 20 நாட்களுக்கு முன்பு கடத்திச் செல்லப்பட்டதாகவும், கடல் சீற்றம் காரணமாக அந்த படகு நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் படகில் இருந்த கடத்தல்காரர்கள் படகை மீட்டுள்ளனர்.

ஆனால், அந்த படகில் இருந்த கஞ்சா மூடைகள் கடல் அலை காரணமாக கடலில் நாலாபுறமும் சிதறி, தமிழகம் மற்றும் இலங்கை கடற்கரையில் கரை ஒதுங்கி வருவதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில 15 நாட்களில் தமிழக கடலோர பகுதிகளில் சுமார் 800 கிலோகிராமுக்கும் அதிகமான கஞ்சா கரை ஒதுங்கியமை குறிப்பிடத்தக்கது.







## நல்லூர் கொடியேற்றம்...

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம், நேற்று (02) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 25 நாள்கள் மகோற்சவ திருவிழாக்கள் நடைபெறவுள்ளதுடன், எதிர்வரும் 11ஆம் திகதியன்று, 10ஆம் திருவிழாவான திருமஞ்ச திருவிழாவும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகை உற்சவமும் 23ஆம் திகதி காலை மாம்பழத்திருவிழாவும் 24ஆம் திகதி சப்பரமும் மறுநாள் 25ஆம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (படங்கள்: எம். றொசாந்த்)

# கற்பதற்கான உரிமை மறுப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

■ விந்தர்ஷன்




யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றில் இருந்து விலகி பிறிதொரு பாடசாலையில் சேர்வதற்கான இடைவிலகல் விண்ணப்பம் தனக்கு உரிய முறையில் தரவில்லை என மாணவி ஒருவர், மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்பின் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மாணவி மற்றும் தாய் கருத்து தெரிவித்தனர்.

மாணவியின் தாய் தெரிவிக்கும் போது, குறித்த தனியார் பாடசாலையில் எனது பிள்ளையை மனரீதியாக பாதிக்கும் வகையில் பல செயற்பாடுகள் இடம்பெற்றதை எனது பிள்ளை என்னிடம் தெரிவித்தார்.

அதன் காரணமாக குறித்த பாடசாலையில் கல்வி கற்பதில் எனது பிள்ளைக்கும் விருப்பமின்மை காரணமாக இடைவிலகல் படிவத்தை தருமாறு பாடசாலை அதிபரிடம் கோரிக்கை விடுத்தேன்.

கொழும்பில் கல்வியை தொடரப் போவதாக தெரிவித்த நிலையில் அவர்கள் இடை விலகல் விண்ணப்பத்தை தருவதற்கு இழுத்தடித்தார்கள்.

கல்வி அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் காணப்படும் நிலையில், விரும்பிய பாடசாலையில் எனது பிள்ளை, கல்வியை தொடர்வதற்கு வழி ஏற்படுத்தி தர இடைநிலைக் விண்ணப்பத்தை உரிய முறையில் பெற்றுத்தர வேண்டும்.

அத்தோடு, எனது பிள்ளையின் ஒழுக்கம் தொடர்பில் பதிவிட்ட காரணத்துக்கான சான்றையும் கூற வேண்டும் எனக்கோரி, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வாள்களுடன் நடமாடிய

# மூவரில் ஒருவர் சிக்கினார்

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் திருட்டு, கொள்ளை மற்றும் வழிப்பறி அதிகரித்துள்ள நிலையில், வாள்களுடன் மக்களை அச்சுறுத்திய வந்த நிலையில் ஒருவர், பிரதேச இளைஞர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

சங்கரத்தைச் சந்தியில் நேற்று முன்தினம் (01) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வட்டுத்தெற்கு மற்றும் மூளாய் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு வாள்களுடன் நடமாடியுள்ளனர்.

அதனை அவதானித்த வட்டுக்கோட்டை இளைஞர்களில் ஒருவர், சந்தேகம் கொண்டு அவர்களை வழிமறிக்க முற்பட்ட வேளை மூவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி வீதியில் வீழ்ந்துள்ளனர்.

அவர்களில் இருவர், வாள்கள் இரண்டை கைவிட்டு தப்பித்த நிலையில், ஒருவர் காயங்களுடன் சிக்கிக்கொண்டார்.

வாள்களுடன் சிக்கிக்கொண்ட மூளாயைச் சேர்ந்தவர், வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இரண்டு வாள்கள் மற்றும் மோட்டார்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# அக்குறணையிலும் வெள்ளம்

மொஹொமட் ஆஸிக்



கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் (1) காலை முதல் பெய்து வரும் கடும் மழை காரணமாக, கண்டி -யாழ்ப்பாணம் ஏ 09 வீதியில் அமைந்துள்ள அக்குறணை நகரம் வெள்ளத்தில் மூழ்கியது.

அக்குறணை நகரினூடாக செல்லும் இரண்டு ஆறுகள் பெருக்கெடுத்ததில் அக்குறணை நகரம் நீரில் மூழ்கியது.

இதன் காரணமாக பல மணித்தியாலங்கள் வாகன போக்குவருத்து தடைப்பட்டு இருந்ததுடன், நான்கு அடி வெள்ளத்தில் அக்குறணை நகரம் மூழ்கி இருந்தது.

### கேகாலை மாவட்டத்தில்

# 21 பேருக்கு கொரோனா

என்.ஆராச்சி



கேகாலை மாவட்டத்தில் இதுவரை 21 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கேகாலை மாவட்ட தொற்று நோய் தொடர்பான விசேட வைத்தியர் சுஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தின் 11 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ருவன்வெல்ல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஐவரும் மாவனெல்ல, ரம்புக்கன, கேகாலை, யட்டியாந்தோட்டை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா மூன்று தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றார்.

அதேப்போல் கலிகமுவ, வரகாபொல ஆகிய சுகாதார பிரிவுகளில் தலா இருவரும் அரநாயக்கவில் ஒரு தொற்றாளரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றார்.

### 27 வருடங்களாக

# பிளக்வாட்டரில் வெள்ள நீர்

இரா. யோகேசன்



சீரற்ற வானிலையால் கினிகத்தேனை -பிளக்வாட்டர் தோட்டத்தில் நேற்று முன்தினம் (1) ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 24 குடியிருப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் சுமார் 24 குடும்பங்களை சேர்ந்த 75 பேர் தொடர்ந்தும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் அந்திரையார் ஆலயத்தில் பாதுகாப்பு தங்கவைக்கப்பட்டிருந்தனர். இருந்த போதும் தற்போது வெள்ள நீர் வீடுகளில் வடிந்துள்ளதால் தமது சொந்த குடியிருப்புகளுக்கு சென்றுள்ளனர்.

எனினும் ,இம்மக்கள் வெள்ளத்தால் தமது உடமைகளை இழந்துள்ளதாகவும் மாணவர்களின் புத்தகங்கள், தமது ஆவணங்கள் உள்ளிட்ட பலவற்றை வெள்ளநீர் சேதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட நேற்று (2) குறித்த பகுதிக்கு கிராம உத்தியோகத்தரும் சமுர்த்தி உத்தியோகத்தரும் வருகை தந்த போதிலும் மக்களின் எதிர்ப்பின் காரணமாக இருவரும் திரும்பிச் சென்றனர்.

ஆற்றை அகலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் எனவே எதிர்வரும் காலத்தில் ஆற்றை அகலப்படுத்தாமல் இத்தோட்டத்திற்குள் எவரும் வர வேண்டாம் என தெரிவித்ததையடுத்து ஏற்பட்ட முரண்பாட்டின் போதே, குறித்த அதிகாரிகள் இருவரும் அவ்விடத்தில் இருந்து வெளியேறி சென்றதாக மக்கள் தெரிவித்தனர்.

தாம் தொடர்ந்து 27 வருடங்களாக ஒவ்வொரு வருடமும் வெள்ள நீரால் பாதிக்கப்பட்டுகொண்டிருக்கின்றோம்.பல அரசியல்வாதிகள் இப்பிரச்சினைக்கு தீர்வு தருவதாக தெரிவித்துவிட்டு சென்றுள்ளனர்.இருப்பினும் தமக்கு இதுவரை உரிய தீர்வு தரப்படவில்லை.

# குளத்தில் விழுந்து இளைஞன் மாயம்

## உடன் சென்ற இருவர் கைது

எம்.கிருஸ்ணா



ஹட்டன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பன்மூர் குளத்தில் வீழ்ந்த இளைஞனை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

எபோட்சிலி- மொன்டிபெயார் தோட்டத்தைச் சேர்ந்த 22 வயதுடைய மைக்கல் பவன் என்பவரே இவ்வாறு குளத்தில் வீழ்ந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் (01) இரவு எட்டு மணியளவில் ஹட்டன் நகரிலிருந்து இண்டு நண்பர்களுடன் குறித்த இளைஞன் மென்டிபெயார் தோட்டத்திலுள்ள தனது வீட்டிற்கு நடந்து சென்ற போதே, வீதியோரத்திலுள்ள குளத்தில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகத்தின் பேரில் இரண்டு இளைஞர்களையும் ஹட்டன் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் குளத்தில் வீழ்ந்த இளைஞனை தேடி மீட்கும் பணியில் ஹட்டன் பொலிஸார் ஈடுபட்டுள்ளதுடன்

குறித்த இளைஞன் தவறி விழுந்தாரா? கொலையா, அல்லது தற்கொலையா என பல கோணங்களிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சீரற்ற வானிலையால்

# 3 மாவட்டங்களில் 11,013 பேர் பாதிப்பு

## போக்குவரத்துகளும் துண்டிப்பு

மலையக நிருபர்கள்






சீரற்ற வானிலையால் நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி ஆகிய 3 மாவட்டங்களிலும் இதுவரை 11,013 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நேற்று (2) வரை மூவர் மரணித்துள்ளதுடன், நால்வர் காணாமல் போயுள்ளனர் என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார்.

சீரற்ற வானிலையால் கொத்மலை, அம்பகமுவ, நுவரெலியா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 254 குடும்பங்களைச் சேர்ந்த 648 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உலருணவுப் பொருட்களை வழங்கவும் அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைக்காக நிதியுதவியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன் மண்சரிவால் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளை அமைப்பதற்கான காணிகள் மற்றும் நிதியுதவியும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நாவலப்பிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (1) பெய்த கடும் மழை காரணமாக, 850 குடும்பங்களைச் சேர்ந்த 3,870 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாவலப்பிட்டி நகரம் மற்றும் நகரை அண்மித்த வீடுகள், சுற்றுலா ஹோட்டல்கள் என்பன முழுமையாக நீரில் மூழ்கியதுடன், இரண்டு பாலங்கள் முழுமையாக சிதைவடைந்துள்ளன.

இதேவேளை கலபொட நீர்வீழ்ச்சியைப் பார்வையிட தனது காதலனுடன் சென்ற 17 வயது யுவதி ஒருவர் காணாமல் போயுள்ளதுடன், அவரைத் தேடும் பணிகள், பிரதேசவாசிகள் மற்றும் நாவலப்பிட்டி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, நாவலப்பிட்டி- கெட்டபுலா அக்கரகந்த தோட்டத்தில் மூவர் நீரில் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களைத் தேடும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இரண்டு பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் 1,666 குடும்பங்களைச் சேர்ந்த 6,495 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 174 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொக்குபோதாகம தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, கொடகாவெல, எலபாத, நிவித்திகல, பெல்மடுல்ல, கலவான, கஹவத்த, குருவிட்ட, எஹலியகொட, வெலிகேபொல, பலங்கொடை, கொலன்ன ஆகிய பகுதிகளில் வெள்ளம், மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆடிப்பூர விழா...

பதுளை, ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானத்தில் ஆடிப்பூர பெருவிழா நேற்று முன்தினம் (1) வெகுவிமரிசையாக நடைபெற்றது. (எம். செல்வராஜா)





# மருந்துகள் வழங்கினார் உதயகுமார் எம்.பி

ஆ.ரமேஸ்



நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துகளை பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார், தனது சொந்த நிதியின் ஊடாக வழங்கி வைத்துள்ளார்.

இதற்கமைய, கந்தப்பளை, தலவாக்கலை, அக்கரப்பத்தனை, ஹட்டன், போன்ற பிரதேசங்களில் காணப்படும் பிரதேச வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் ஒரு நிகழ்வு கந்தப்பளை -டெனிஸ்கிளப் பிரதேச வைத்தியசாலையில் நேற்று (2) நடைபெற்றதுடன்,

தொழிலாளர் தேசிய சங்கத்தின் அரசியல் மற்றும் தொழிற்சங்க பிரமுகர்களான அழகமுத்து நந்தகுமார், ராம் உள்ளிட்ட குழுவினருடன் பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் வைத்தியசாலை வைத்தியரிடம் மருந்துப் பொருட்களை கையளித்தார்.

# 4 மாடிக் கட்டடம் அபாயத்தில் உள்ளது

ரஞ்சித் ராஜபக்ஷ




சீரற்ற வானிலையால் ஹட்டன் எம்.ஆர் பகுதியிலுள்ள கட்டடம் ஒன்று உடைந்து விழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இதனால் குறித்த கட்டடத்தில் சாரதி பயிற்சி நிலையத்தை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து நேற்று(1) இரவு 10 மணிக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

அடை மழையைத் தொடர்ந்து 4 மாடிகளைக் கொண்ட குறித்த கட்டடத்தின் சுவர்கள் வெடித்துள்ளன. குறித்த கட்டடத்துக்கு கீழ், காசல்றீ நீர்த்தேக்கத்துக்கு நீரை ஏந்திச் செல்லும் சிறிய கால்வாய் ஒன்று காணப்படுவதால் கட்டடம் உடைந்து விழும் அபாயத்தில் உள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அலஹகோன் தெரிவித்தார்.

# நூரளையில் QR முறை

டி சந்ரு



நுவரெலியா மாவட்டத்தில் QR முறையில் வாகனங்களுக்கு எரிப்பொருள் வழங்கும் திட்டத்தை நேற்று முன்தினம் (1) முதல் ஆரம்பித்துள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார். வாரத்தில் ஒருநாள் மாத்திரம் அந்த வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

நுவரெலியாவில் நேற்று (2) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு உள்ளிட்ட மரக்கறிகள் நாடு முழுவதும் கொண்டு செல்லப்படுவதால் தினந்தோறும் மரக்கறிகளை ஏற்றி செல்லும் லொறிகளுக்கு 100 லீற்றர் டீசல் தேவைப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், அந்த வாகனங்களுக்கான எரிபொருளை இலங்கை போக்குவரத்து சபை டிப்போ மூலம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.



# களத்தில் ஜீவன் எம்.பி

ஆ.ரமேஸ்

சீரற்ற வானிலையால் நுவரெலியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களையும் பாதிக்கப்பட்ட இடங்களையும் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதற்கமைய, ஹட்டன், குடாஓயா, பன்மூர்,

ஒல்ட்டன், சாமிமலை ஆகிய பகுதிகளிலுள்ள தோட்டப்பகுதிகளுக்கு நேற்று (2) காலை சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# புதினம் பார்க்கச் செல்வதை தவிர்ப்பதே மேலானது

வேடிக்கை பார்ப்பதை முற்றாகவே இல்லாதொழிப்பது சிரமமான காரியங்களில் ஒன்றாகவே இருக்கும். ஒரு சில நிமிடங்களுக்கேனும் வேடிக்கை பார்க்காதவர்கள் இருக்கவே மாட்டார்கள். எனினும், எவற்றையெல்லாம் வேடிக்கை பார்க்கவேண்டுமென தெரிந்து வைத்துக்கொள்ளாதவர்கள் சிக்கல்களுக்குள் மாட்டிக்கொள்கின்றனர்.

புதினம் பார்ப்பதற்குச் சென்று, வீடு திரும்பாதவர்கள் பலருளர். பொதுவாக சொல்வதாயின், இயற்கை அனர்த்தங்களை வேடிக்கை பார்க்கச் செல்வதை முழுமையாக தவிர்த்துக்கொள்வதே உயிருக்கு உத்தரவாதமாக இருக்கும். “நாங்கள் எந்தநாளும் குளித்து விளையாடும் ஆறு” என்ற நினைப்போடு, வெள்ளம் பெருக்கெடுக்கும் போது கரையோரத்தில் நின்றிருந்தால் கூட இழுத்துச் சென்றுவிடும் என்பதை நினைவில் கொள்க.

நமது நாட்டிலும் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காலநிலை, வெளுத்து வாங்கிக்கொண்டிருக்கின்றது. இதன் கோரப்பிடிக்குள் மலையகத்தின் பல பிரதேசங்களும் சிக்கிக்கொண்டுள்ளன. ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. மலைப்பாங்கான பிரதேசங்களில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மலையத்தில்தான் இயற்கையின் சீற்றம் தாண்டவமாடுகின்றது என்ற நினைப்பில் தாழ்நில பிரதேசங்களில் வாழ்வோர் அசட்டையாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில், மலைப்பாங்கான பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும், தாழ்நில பிரதேசங்களிலேயே அவை வடிந்தோடும்.

ஆகையால், ஆற்றங்கரையோரங்களில் குடியிருப்போர், நீரேந்தும் பிரதேசங்களில் இடம்பெறும் வானிலை மாற்றங்கள் தொடர்பில் அவதானமாகவே இருக்கவேண்டும். இல்லையேல், வேண்டாத அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

இயற்கையின் தாண்டவத்தால் பல பிரதேசங்களின் போக்குவரத்துகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் யாவும் முன்னேற்பாடாக நேற்று (02) மூடப்பட்டன. குறுகிய தூரங்களுக்குச் செல்லவேண்டியவர்கள் குறுக்கு வீதிகளை பயன்படுத்துவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குறுக்கு வீதியின் பயணமும் ஆபத்தானது என்பதை நினைவில் கொள்க.

இதனிடையே பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி இருக்கும் மக்களுக்கு, நிவாரணங்களை வழங்கும் வேலைத்திட்டங்களை அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும். வீடு, வாசல்களை இழந்திருக்கும் பலருக்கும் உதவியே தேவைப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நிலையில், இருப்பதைக் கொண்டு வாழமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. ஆகையால், உதவிக்கரங்களை நீட்டுவதே தற்போதைய நிலையில் பெரும் தேவையாகும்.

அதுமட்டுமன்றி, இயற்கையை சுரண்டக்கூடாது என்பதை இனியாவது ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டும். மலைப்பாங்கான இடங்களை குடைந்து கொண்டு குடியிருப்புகளை நிர்மாணிப்பது, தாழ்நில பிரதேசங்களில் வீடுகளைக் கட்டுவது, ஆற்றில் கழிவுகளைக் கொட்டி, நீர்வழிந்தோடாத வகையில் இடையூறுகளை ஏற்படுத்துவது என எல்லாமே மனிதனால் தனக்குத் தானே தேடிக்கொண்ட வினைகளாகும்.

இயற்கையின் சீற்றத்தை ஒருபோதும் தடுத்துநிறுத்தவே முடியாது. எனினும், அந்தச் சீற்றங்களில் இருந்து பாதுகாத்துக்கு கொள்ளும் வகையிலான பாதுகாப்பு முன்னேற்பாடுகளை செய்து கொள்ளலாம்.

இயற்கை சீற்றங்கள் எல்லாமே புதிதல்ல; ஆகையால், அவற்றை பார்வையிடச் செல்வதை தவிர்த்து, மீட்பு பணிகளில் ஈடுபட்டிருக்கும் குழுவினருக்கு உதவி ஒத்தாசை வழங்கவேண்டும். அதனூடாகவே நிலைமையை விரைவில் சீர்செய்யமுடியும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# சர்வகட்சி அரசாங்கம் தீர்வைத் தருமா?



எம்.எஸ்.எம். ஐயூப்

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றைத் தாம் உருவாக்கப் போவதாகவும், அதில் இணையுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சகல உறுப்பினர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்தக் கடிதமும் சர்வகட்சி அரசாங்கம் என்ற எண்ணக்கருவும், இப்போது அரசியல் கட்சிகளுக்கு இடையேயும் அரசியல்வாதிகளுக்கு இடையேயும் பல்வேறு வாதப்பிரதிவாதங்களை தோற்றுவித்துள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாக அக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரனை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க, சிங்கள மக்களின் துரோகி என்றும் நாட்டை புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்க முற்பட்டவர் என்றும் ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடி என்றும் கூறி வந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் அரசாங்கத்தில் சேர முயல்வதாகத் தெரிகிறது.

அதேவேளை, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுக்காமல், அக்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு தனித்தனியாக கடிதம் அனுப்பியதன் மூலம், அக்கட்சிகளுக்குள் பிரச்சினைகளை உருவாக்க முயல்வதாக, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

அது நியாயமான குற்றச்சாட்டாகும். ஏனெனில், தனித்தனியாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வாறான கடிதங்கள் அனுப்புவதன் மூலம், அந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவர் மனதிலும் அமைச்சர் பதவிகளுக்கான ஆசை ஊட்டப்படுகிறது. அதன் மூலம் அவர்கள் தத்தமது கட்சித் தலைமையை புறக்கணித்து, அரசாங்கத்தில் இணைய முற்படலாம். அது அக்கட்சிகளுக்குள் பல்வேறு பிரச்சினைகள் உருவாகக் காரணமாகலாம்.

உண்மையிலேயே சர்வகட்சி அரசாங்கம் என்பது, சகல கட்சிகளினது தலைவர்களுக்கும் அமைச்சர் பதவிகள் கிடைக்கும் அரசாங்கம் என்றதொரு கருத்தையே கொடுக்கிறது. எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பு, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய விருப்பம் தெரிவித்ததாகக் கூறப்படும் செய்தியைக் கேட்ட உடனேயே, அக்கட்சியின் தலைவர்களும் அமைச்சர் பதவிகளை ஏற்கப் போகிறார்கள் என்றதோர் எண்ணமே மனதில் உருவாகிறது. நடைமுறையில் ஓர் அரசாங்கம், சர்வகட்சி அரசாங்கம் என்று கூறுவதற்கு அதைத் தவிர வேறு வழியே இல்லை.

இம்முறை, சர்வகட்சி அரசாங்கம் என்ற கருத்து நாடு எதிர்நோக்கி இருக்கும் சமூகப் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சியாக எடுத்துக் காட்டப்பட்ட போதிலும், அது, அமைச்சர் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்திலேயே முதன்முதலில் முன்வைக்கப்பட்டது. இன்றும் பல சிறிய கட்சிகளின் நோக்கம் அதுவேயாகும்.

கடந்த மார்ச் மாதம் இரண்டாம் திகதி தலவத்துகொடையில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது, அமைச்சர்களான விமல் வீரவன்சவும் உதய கம்மன்பிலவும் அரசாங்கத்தை விமர்சித்ததை அடுத்து, மூன்றாம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவ்விருவரையும் அமைச்சரவையில் இருந்து நீக்கினார்.

அந்நாள்களில், பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, நாளுக்கு நாள் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வந்தன. அரசாங்கம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது தத்தளித்தது. மார்ச் மாதம் 31 ஆம் திகதி, மிரிஹானையில் உள்ள ஜனாதிபதியின் சொந்த இல்லத்தின் முன்னால், பாரியதோர் ஆரப்பாட்டம் நடைபெற்றது.

இவ்வாறான பின்னணியில், விமலும் கம்மன்பிலவும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மேலும் எட்டு சிறிய கட்சிகளின் தலைவர்களும், ஏப்ரல் முதலாம் திகதி ஜனாதிபதியுடன் நாட்டு நிலைமையைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்கி, நாட்டில் அவசர பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, விரைவில் பொதுத்தேர்தலை நடத்தி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்ய வேண்டும் என்ற கருத்தை, அச்சிறிய கட்சிகள் முன்வைத்தன.

இவ்வாறுதான், சர்வகடசி அரசாங்கம் என்ற எண்ணக்கரு தோன்றியது. சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்தால், வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்ற கேள்வி இங்கே எழுகிறது. சில அரசியல்வாதிகளுக்கு அமைச்சுப் பதவிகள் இல்லாமல் வாழவே முடியாது. அவ்வாறான சில தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். இந்த விடயத்திலும் தாம் இழந்த அமைச்சர் பதவிகளை மீண்டும் அடைவதே விமல், கம்மன்பில ஆகியோரின் நோக்கமாகியது.

அப்போது, கோட்டாபயவின் அரசாங்கம், எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனங்களுக்கு இலக்காகியது. அந்த நிலையில், சகல கட்சிகளும் அரசாங்கத்தில் இணைந்தால், எவரும் தமது அரசாங்கத்தை விமர்சிக்க மாட்டார்கள் என்று நினைத்தோ என்னவோ, கோட்டாவும் அந்த ஆலோசனையை ஏற்று, ஏப்ரல் மூன்றாம் திகதி தமது சகோதரரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர, ஏனைய சகல அமைச்சர்களையும் இராஜினாமாச் செய்யுமாறு பணித்தார். பின்னர், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை நிறுவ முன்வருமாறு, நாடாளுமன்றத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொண்டார்.

ஆனால், மூன்றாம் திகதி சமூக வலைத்தளங்கள் மூலம் அழைக்கப்பட்டு, கொழும்பில் பாரியதோர் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எனவே, சர்வகட்சி அரசாங்கம் என்ற கருத்தை முன்வைத்த சிறு கட்சிகளும் கூட, அரசாங்கத்தில் இணையத் தயங்கின. எனினும், இந்தக் கருத்துக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த சகல கட்சிகளும், நாடாளுமன்றத்தில் இதனை ஏற்றுக் கொண்டன. “நாம் இவ்வாறான அரசாங்கத்தில் சேர்வதில்லை; ஆனால், இதற்கு ஒத்துழைப்போம்” என மக்கள் விடுதலை முன்னணி கூறியது.

நாட்டில், நிலவும் பெரும் சமூகப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதே, சர்வகட்சி அரசாங்கத்தின் நோக்கம் எனக் கூறப்படுகிறது. ஆயினும் சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்தால், தீர்வு எவ்வாறு வரும் என்ற கேள்விக்கு எந்தவொரு கட்சியும் பதிலளிப்பதில்லை.

தீர்வு என்பது, உடல் உழைப்பால் காணக்கூடியதல்ல; அறிவால் காணவேண்டியதாகும். நாடாளுமன்றத்தில் சகல கட்சிகளும் ஆளும் கட்சியாக ஒன்று சேர்ந்து கலந்துரையாடினால், தீர்வைக் காணமுடியும் என்றால் அதே கட்சிகள், நாடாளுமன்ற கூட்டங்களின் போது கலந்துரையாடி ஏன் தீர்வு காண முடியாது? நாடாளுமன்றத்தில் முடியாது; ஆளும் கட்சிக் கூட்டத்தில் தான் முடியும் என்றால் நாடாளுமன்றம் எதற்கு?

சர்வகட்சி அரசாங்கம் என்ற பெயரில், அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்தாலும் அரசியலமைப்பின் பிரகாரம் அது தேசிய அரசாங்கமாகவே அழைக்கப்படும். அரசியலமைப்பின் படி சாதாரண நிலைமையின் கீழ் அரசாங்கத்தில் 30 அமைச்சர்கள் தான் இருக்க முடியும். ஆனால், தேசிய அரசாங்கம் ஒன்றில் அமைச்சர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை. எனவே, சர்வகட்சி அரசாங்கம் அல்லது தேசிய அரசாங்கம் என்ற பெயரில் ஒன்றிணைய, குறிப்பாக சிறுகட்சிகள் விரும்புகின்றன.

நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதே சர்வகட்சி அரசாங்கத்தின் நோக்கம் என்றால், எந்தவொரு கட்சியும் அமைச்சுப் பதவிகளைப் பற்றி அக்கறை செலுத்தத் தேவையில்லை. அமைச்சர் பதவிகளைப் பெறாமலே, அரசாங்கத்தில் இணைய சிறு கட்சிகள் முன்வர வேண்டும். அல்லது, அக்கட்சிகளின் திறமையானவர்களுடன் அந்த 30 அமைச்சர் பதவிகளை பகிர்ந்து கொள்ள பெரிய கட்சிகள் தயாராக வேண்டும். அதற்கு சிறிய, பெரிய கட்சிகள் தயாரில்லை என்றால், சர்வகட்சி அரசாங்கம் என்பது அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்கும் அதிகாரத்தை பலப்படுத்திக் கொள்வதற்குமான முயற்சியேயன்றி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சி அல்ல.

ஆளும் கட்சி, ஏனைய கட்சிகளுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கினால் தான், அக்கட்சிகள் ஆளும் கட்சியோடு இணையும் என்றால், அது இலஞ்சமேயன்றி வேறொன்றுமல்ல. எனினும், தேசிய அரசாங்கத்தை நிறுவ அவ்வாறு இலஞ்சம் வழங்குவதையும் பெறுவதையும் அரசியலமைப்பு அங்கிகரிக்கிறது. அதனால் தான், தேசிய அரசாங்கம் என்றால் அமைச்சர் பதவிகளை 30 மேலாக அதிகரிக்க இடமளிக்கிறது.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றில் கட்சிகள் ஒன்றிணைவதாக இருந்தால் அவ்வாறு இணைவதற்கான கொள்கை அடிப்படையிலான இணக்கப்பாடொன்று இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவ்வாறான கூட்டுகள் வெறும் சந்தர்ப்பவாத கூட்டுகளேயாகும். அங்கே, பிரதான கட்சி விமர்சனங்களை தவிர்ப்பதற்காகவும் ஏனைய கட்சிகள் அமைச்சர் பதவிகளுக்காகவும் ஏனைய உயர் மட்ட பதவிகளுக்காகவுமே ஒன்றிணைகின்றன.

தற்போதைய நிலையில், நாடு எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை நிறுவுவதாக இருந்தால், முதலில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் தலைவர்களும் நிபுணர்களும் கலந்துரையாடி, தீர்வைத் திட்டமிட வேண்டும். தீர்வுத் திட்டம் இல்லாததால்த்தான், இலங்கைக்கு நிதி உதவி, தற்போதைக்கு வழங்கப் போவதில்லை என்று உலக வங்கியும் கூறியுள்ளது.

கடசிகள் அவ்வாறானதொரு திட்டத்தை வகுத்துக் கொண்டால், பின்னர் அத்திட்டத்தை நிறைவேற்ற அரசியல் ரீதியாக ஒன்றிணையலாம். தீர்வு தேடும் முயற்சி தோல்வியடைந்தால், சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும். முதலில், சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவி, அமைச்சர் பதவிகளை அதிகரித்து தம்மிடையே பகிர்ந்து கொண்ட பின்னர், தீர்வு தேடும் முயற்சி தோல்வியடைந்தாலும் பட்டம், பதவிகள் காரணமாக இக்கூட்டுகள் கலைவதில்லை. அதிகரிக்கும் பட்டம், பதவிகளுக்காக மக்களின் வரிப் பணமே செலவாகும்.



## வாழ்வியல் தரிசனம்

இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் தெரியாமலேயே வாழும் கூட்டமும் உண்டு. எந்த நேரமும் உறக்கத்துடன் தன்னிலை மறப்பவர்கள், மது, போதைப் பிரியராகவும் இருக்கிறார்கள்.

ஆனால், சோம்பேறிகள் வேறு இரகத்தைச் சேர்ந்தவர்கள். இது விடயத்தில், வசதியான குடும்பத்தில் இருப்பவர்களை உதாரணமாக எடுத்துக் கொண்டால், உலகம் உருண்டையானது என்பதும் தெரியாமல், கல்வி கற்றுத் தொழில் தேடவேண்டும் என்ற விவஸ்தை கூட இல்லாமல் சிலர் வாழ்கின்றார்கள். இவர்கள், வறியவர்கள் மட்டுமல்ல; பரதேசிகள் ஆவார்.

குறைந்த வருமானத்திலும் குடும்பத்துடன் சந்தோசமாக வாழ்பவரே, சொர்க்கத்து தேவர்களை விட, உயர்ந்த நிலையில் இருப்பவர் ஆகிறார். உலகம் சுழலும்போது, வாழ்க்கை அமைப்பும் மாறும். அதைத்தான் மாற்றம் என்கின்றோம்.

மாற்றங்களுடன் நாம் எப்படியும் இணங்கித்தான் ஆகவேண்டும். மாற்றங்களை சிந்தித்து, தேர்ந்தெடுத்துக் கொள்வதே புத்திசாலித்தனம். இஷ்டத்துக்கு வாழ்வது, புத்திகெட்ட வேலை. விழிப்புடன் வாழ்வதே வெற்றி!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நிந்தவூரில் பாரிய கடலரிப்பு



நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு காரணமாக கடற்கரையை அண்டி வாழும் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு கடலை அண்டிய பகுதிகள் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதோடு, மீனவர்களின் மீன்பிடி வாடிகளும் தென்னை மரங்களும், கடல் நீரால் காவுகொள்ளப்படுகின்றன.

கடலரிப்பு காரணமாக கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதோடு கடற்கரை பிரதேசம் கடல் நீரால் அடித்து செல்லப்படுவதால் மீனவர்களின் இயந்திரப் படகுகள், தோணிகளை கடற்கரை ஓரம் நிறுத்த முடியாது, மேட்டுப் பகுதிகளுக்கு நகர்த்த வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரையை அண்டியுள்ள பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது கட்டடங்கள், மீனவர் தங்குமிடம் போன்றவையும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பை தடுப்பதற்கு கடலோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் என்பன இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, நிந்தவூர் பிரதேசம் எதிர்நோக்கியுள்ள இக் கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு, சம்மந்தப்பட்ட தரப்பினர் தாமதமின்றி, காதத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

-எம்.எஸ்.எம். ஹனீபா

சென்னை

உறுதுணையாக இருந்தால்

# தி.மு.க தூக்கி எறியப்படும்

பிரதமர் என்ற முறையிலேயே மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், மரியாதை கொடுத்திருப்பார். மோடிக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என நினைத்தால், திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) தூக்கி எறியப்படும் என்பது ஸ்டாலினுக்கே தெரியும் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் (வி.சி.க) மாநில நிர்வாகி சங்கத்தமிழன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் சென்னை வருகையைத் தொடர்ந்து, தி.மு.க கூட்டணியில் பல்வேறு சலசலப்புகள் எழுந்து அடங்கியுள்ளன. பிரதமர் மோடியுடன் ஸ்டாலின் காட்டிய இணக்கம், பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியது.

கூட்டணியில் இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி



இணக்கமான உறவைக் கடைபிடிக்காமல் தவிர்த்த நிலையில், ஸ்டாலினுடன் காட்டிய நெருக்கம், அரசியல் அரங்கில் விவாதங்களைக் கிளப்பியது.

தி.மு.கவாக இருந்தாலும் சரி, விடுதலைச் சிறுத்தைகளாக இருந்தாலும் சரி, சனாதனத்தை எதிர்ப்பதில் உறுதியாக இருந்து வருகிறது. தற்போது இங்கு நடப்பது சர்வதேச அளவிலான போட்டி. எனவே இந்தப் போட்டியில் நாட்டின் பிரதமர் என்ற முறையில் அவருக்கு மாநில அரசு மரியாதை கொடுக்க வேண்டிய சூழல் இருக்கிறது என, வி.சி.க மாநில இளைஞரணி தலைவர் சங்கத்தமிழன் தெரிவித்துள்ளார்.

மலப்புரம்

## தம்பியை இலாவகமாக காப்பாற்றிய அண்ணன்

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் சகோதரர்கள் இருவர், தங்களது வீட்டை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். தம்பி வீட்டின் மாடியில் ஏறி சுத்தம் செய்தார். அண்ணன் கீழ்தளத்தில் வேலை செய்துகொண்டிருந்தார்.

அப்போது திடீரென மாடியில் இருந்து தம்பி தவறி விழுந்தார். உடனே அவரது அண்ணன் அவரை இலாவகமாகப் பிடித்து காப்பாற்றினார். இதில் தம்பியின் எடை தாங்காமல்



அண்ணனும் கீழே விழுந்தார். இந்த விபத்தில் இருவருக்கும் சிறு காயம் கூட ஏற்படவில்லை.

இந்தக் காட்சிகள் அங்கிருந்த கண்காணிப்பு கெமராவில் பதிவாகி இருந்தன.



இந்தியா

## தேசிய கொடி தயாரிப்பு

பொதுமக்கள் தங்கள் வீடுகளில் எதிர்வரும் 13 முதல் 15ம் திகதி வரை தேசிய கொடி ஏற்ற வேண்டும் என பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனால் நாடு முழுவதும் தேசிய கொடி தயாரிப்பு பணி மும்முரமாக நடந்து வருகிறது.

மதுரை

## அம்மனுக்கான கூழில் விழுந்து முருகன் பலி

மதுரை, பழங்காநத்தம் பகுதியில் முத்துமாரியம்மன் கோவிலில் ஆடி வெள்ளியை முன்னிட்டு அம்மனுக்கு கூழ் காய்ச்சியபோது, கொதிக்கும் கூழில் பக்தர்களில் ஒருவர் தவறி விழுந்து மரணித்துள்ளார்.

அப்போது, முத்துக்குமார் என்கின்ற முருகனுக்கு எதிர்பாராதவிதமாக வலிப்பு வந்ததால், நிலைதடுமாறி கொதிக்கும் கூழ் அண்டாவில் விழுந்தார்.



அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். 65 சதவீதத்திற்கு மேல் தீக்காயம் இருந்ததால் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



ஜம்மு


## மர்ம பறக்கும் பொருள் மீது துப்பாக்கிச் சூடு

ஜம்மு மற்றும் காஷ்மீரில் எல்லை பாதுகாப்பு படையினர் (பி.எஸ்.எப்.) ரோந்து மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இராணுவ வீரர்களுடன் இணைந்து, பயங்கரவாத ஊடுருவல், ஆயுத கடத்தல் ஆகியவற்றுக்கு எதிரான தடுப்பு பணிகள் உள்ளிட்ட பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், காஷ்மீரின் கனாசக் பகுதியில் சர்வதேச எல்லையில் அடையாளம் தெரியாத மர்ம பறக்கும் பொருளொன்று நேற்று முன்தினம் (01) இரவு மின்னும் ஒளியுடன் கடந்து செல்ல முயற்சித்து உள்ளது. இதனை கவனித்த எல்லை பாதுகாப்பு படையினர் அதன் மீது துப்பாக்கி சூடு நடத்தி உள்ளனர்.

சென்னை

## பேனாவை நிறுவ ஒப்புதல் வேண்டும்



மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியைக் கௌரவப்படுத்தும் விதமாக, அவரது நினைவிடம் அருகே கடலினுள் 134 அடி உயரத்தில் பேனா சின்னத்தை நிறுவ மத்திய அரசின் சுற்றுசூழல் துறையின் ஒப்புதலை தமிழக பொதுப்பணித் துறை கோரியுள்ளது.

கருணாநிதியின் உடல், மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிட வளாகத்தில் அவர் பயன்படுத்திய பேனாவுடன் வைத்து அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில், ரூ.39 கோடியில் 2.21 ஏக்கர் பரப்பில் நினைவிடம் அமைக்கும் பணி தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும், பேனா நினைவுச்சின்னத்தை ஒட்டி புல்வெளிகள் உட்பட கண்ணை கவரும் வகையிலான கலை நயம்மிக்க ஏற்பாடுகளும் செய்யப்பட உள்ளன. கருணாநிதி நினைவிடத்தில் இருந்து நடுக்கடலில் அமைக்கப்படும் ‘பேனா’ நினைவுச்சின்னத்துக்கு 290 மீற்றர் நிலப்பரப்பிலும், 360 மீற்றர் கடலின் மேலேயும் செல்லும் வகையில் 650 மீட்டர் நீளத்தில் பிரமாண்ட இரும்பு பாலம் நிறுவப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



கேரளா

## பாட்டிக்கு படிப்பில் தீரா ஆர்வம்

கேரளா மாநிலத்தில் 68 வயதான மூதாட்டி விஜயகுமாரி பட்டம் பெற வேண்டுமென்ற ஆர்வத்தில் இளங்கலை பட்டப்படிப்பு பயின்று வருகிறார். விஜயகுமாரி 10ஆம் வகுப்பு முடித்த நிலையில், திருமணம் காரணமாக 11, 12ஆம் வகுப்பு படிக்க முடியாமல் போயிற்று. காலங்கள் ஓடி விஜயகுமாரிக்கு குழந்தை பிறந்த பின்னர் அவர்களுக்கும் திருமணம் ஆகி அவர்களும் பிள்ளை பெற்று விட்டனர். தனது பேரப்பிள்ளைகளுடன் விஜயகுமாரி பொழுதை கழித்தாலும், அவர் மனதில் நம்மால் படிப்பை தொடர முடியவில்லையே என்ற கவலை ஓரமாக இருந்து வந்துள்ளது. இப்போது அது நிறைவேறியுள்ளது.





## பாதிப்பு

மலையகத்தின் பல பிரதேசங்களிலும் பெய்துவரும் கடும் மழை காரணமாக, கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.


(தமிழ்மிரர் நிருபர்கள்)




































வாஷிங்டன்

# எத்தனை காலம் ஆனாலும் விடமாட்டோம்

எத்தனை காலம் ஆனாலும் விடமாட்டோம்; எங்கு ஓடினாலும் தப்ப முடியாது என்று அல் காய்தா தீவிரவாத கும்பல் தலைவர் அய்மான் அல்- ஜவாஹிரி கொல்லப்பட்டது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கருத்து தெரிவித்துள்ளார்.



அல்-காய்தா அமைப்பின் நிறுவனர் ஒசாமா பின்லேடன் 2011 இல் பாகிஸ்தானில் பதுங்கி இருந்தபோது அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டார். அதன்பின் அல்-காய்தா அமைப்பை வழிநடத்தி வந்தார் அல்- ஜவாஹிரி. இவர் ஆப்கானிஸ்தானில் தங்கியிருந்து தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். சில நேரங்களில் குறிப்பாக, இந்திய விவகாரங்களில் வீடியோக்களில் தோன்றி பேசிவந்தார்.

அமெரிக்காவில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட அவர், ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் பதுங்கியிருந்தார். ட்ரோன் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

இந்நிலையில் இது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போது அவர், “அல் ஜவாஹிரி பதுங்கியிருக்கும் இடத்தை அறிந்துவிட்டதாக தகவல் வந்ததும். அவரை அழிக்கும் ஆபரேஷனுக்கு நான் அனுமதி கொடுத்தேன். அல் ஜவாஹிரி கொல்லப்பட்டதால் அமெரிக்காவில் செப்டம்பர் 11 இல் நடந்த தீவிரவாத தாக்குதலில் கொல்லப்பட்ட 3000 பேரின் குடும்பங்களுக்கு நீதி வழங்கப்பட்டுள்ளது" என்றார்.




பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள்:

# அரையிறுதியில் யுபுன் அபேயக்கோன்

பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான 100 மீற்றர் பந்தயத்தின் அரையிறுதிப் போட்டிக்கு இலங்கையின் யுபுன் அபேயக்கோன் தகுதி பெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆறாவது தகுதிகாண் போட்டியில் 10.06 செக்கன்களில் போட்டித் தூரத்தை கடந்தே அரையிறுதிப் போட்டிக்கு அபேயக்கோன் தகுதி பெற்றுள்ளார்.

இலங்கை நேரப்படி இன்றிரவு 11.40 மணிக்கு அரையிறுதியும், நாளை அதிகாலை 2 மணிக்கு இறுதிப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், நேற்று மாலை 5 மணி வரையில் 31 தங்கப் பதக்கங்கள், 20 வெள்ளிப் பதக்கங்கள், 20 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 71 பதக்கங்களுடன் தொடர்ந்தும் பதக்கப் பட்டியலில் அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கிறது.

21 தங்கப் பதக்கங்கள், 23 வெள்ளிப் பதக்கங்கள், 11 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 55 வெண்கலப் பதக்கங்களுடன் போட்டியை நடாத்தும் நாடான இங்கிலாந்து இரண்டாமிடத்தில் காணப்படுகின்றது. 13 தங்கப் பதக்கங்கள், ஏழு வெள்ளிப் பதக்கங்கள், நான்கு வெண்கலப் பதக்கமென மொத்தமாக 24 பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் நியூசிலாந்து காணப்படுகின்றது.

ஜொகனஸ்பெர்க்

8 பெண்களுக்கு பாலியல் வன்கொடுமை

# ஆண்களை நிர்வாணப்படுத்தி அட்டூழியம்

தென்னாப்பிரிக்காவில் மியூசிக் ஆல்பத்திற்கான வீடியோ சூட்டின் போது எட்டு இளம் பெண் மாடல்கள் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்ட அதிர்ச்சிக்குரிய சம்பவம் அரங்கேறியுள்ளது.

அந்நாட்டின் ஜொகனஸ்பெர்க் பகுதியில் உள்ள குருகெர்ஸ்டிராப் சிறு நகரத்தில் மியூசிக் ஆல்பம் ஒன்றுக்கான வீடியோ ஷூட்டிங் நடைபெற்றுள்ளது.

இதில் 18 முதல் 35 வயதுக்குட்பட்ட பெண் மாடல்களும் பல ஆண்களும் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், இந்த ஷூட்டிங் போது துப்பாக்கிய ஏந்திய ஒரு கும்பல் உள்ளே புகுந்து அந்த ஷூட்டிங்கில் உள்ள பெண் மாடல்களை கூட்டு பாலியல் வன்புணர்வு செய்துள்ளனர்.

மேலும், அங்கிருந்த ஆண்களை நிர்வாணப்படுத்தித் தாக்கிய துப்பாக்கி ஏந்திய கும்பல், அனைவரின் பணத்தையும் பொருள்களையும் பிடுங்கி களவாடி சென்றுள்ளனர்.

தென்னாப்பிரிக்காவில் பாலியல் குற்றங்கள் அதிகம் காணப்படுவதாகவும், சராசரியாக 12 நிமிடத்திற்கு ஒருவர் பாலியல் குற்றத்திற்கு ஆளாவதாகவும் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

பிரித்தானியா

# 33 மணிநேர அறுவை சிகிச்சை வெற்றி



தங்கள் மூளைகளை இணைத்து பகிர்ந்து கொண்டு இருந்த இரட்டையர்கள் 33 மணி நேர அறுவை சிகிச்சைக்கு பிறகு வெற்றிகரமாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவை தலைமையிடமாக கொண்ட ரியோ டி ஜெனிரோவின் கிரேட் ஆர்மண்ட் ஸ்ட்ரீட் மருத்துவமனையிலேயே இந்த சத்திரசிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டில் அட்ரிலி மற்றும் அன்டோனியா லிமா என்ற தம்பதியருக்கு பிறந்த பெர்னார்டோ மற்றும் ஆர்தர் லிமா என்ற தலையொட்டி பிறந்த மூன்று வயதான இரட்டையர்களே இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளனர்.

தலையொட்டி பிறந்த இரட்டை குழந்தைகளுக்கு மொத்தம் ஏழு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. இவற்றில் கடைசி இரண்டு அறுவை சிகிச்சைகள் மட்டும் 33 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்றுள்ளது. இதில் 100க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவை தலைமையிடமாக கொண்ட ரியோ டி ஜெனிரோவின் கிரேட் ஆர்மண்ட் ஸ்ட்ரீட் மருத்துவமனையின் குழந்தை அறுவை சிகிச்சை நிபுணர் நூர் உல் ஓவாஸ் ஜீலானியின் வழிகாட்டுதலின் கீழ் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அகில இலங்கை ரீதியில் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட குத்துச்சண்டை:

# இரண்டாமிடம் பெற்ற இரத்தினபுரி சுமன மகா வித்தியாலயம்

■ சிவாணி ஸ்ரீ

அகில இலங்கை ரீதியில் பாடசாலை மட்டத்தில் 46 ஆவது தடவையாக நடாத்தப்பட்ட டு.ஏ. ஜயவீர கிண்ண குத்துச்சண்டைப் போட்டியில் இரண்டாமிடத்தை இரத்தினபுரி சுமன மகா வித்தியாலயம் பெற்றது.

கண்டி சாந்த சில்வெஸ்டர் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் 101 பாடசாலைகளை சேர்ந்த 478 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் இரத்தினபுரி சுமன மகா வித்தியாலயத்தை சேர்ந்த 13-18 வயதுக்குட்பட்ட 51 கிலோ கிராம் தொடக்கம் 54 கிலோ கிராம் எடைப் பிரிவின் கீழ் இரண்டு மாணவர்கள் தங்கப் பதக்கத்தையும் மற்றும் 13-14 வயதுக்குபட்ட 33 கிலோகிராம் தொடக்கம் 35 கிலோகிராம் எடைப் பிரிவின் கீழ் இரண்டு மாணவரகள் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று வெற்றி கொண்டனர்.

இம்முறையே இரத்தினபுரி சுமன மகா வித்தியாலய வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டியில் கொழும்பு மாநாம வித்தியாலயம் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# இந்தியாவை வென்ற மே. தீவுகள்

இந்தியாவுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், சென். கிட்ஸில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

இந்தியா: 138/10 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹர்டிக் பாண்டியா 31 (31), இரவீந்திர ஜடேஜா 27 (30), றிஷப் பண்ட் 24 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஒபெட் மக்கோய் 6/17 [4], ஜேஸன் ஹோல்டர் 2/23 [3.4], அகீல் ஹொஸைன் 1/22 [4], அல்ஸாரி ஜோசப் 1/29 [4])

மே. தீவுகள்: 141/5 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரண்டன் கிங்க் 68 (52), டெவொன் தோமஸ் ஆ.இ 31 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 1/16 [3], ஹர்டிக் பாண்டியா 1/22 [4], அர்ஷ்டீப் சிங்க் 1/26 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 1/32 [4], புவ்னேஷ்வர் குமார் 0/12 [2])

போட்டியின் நாயகன்: ஒபெட் மக்கோய்




லாகூர்

# தகாத உறவால் உறுப்புகளை அறுத்த கணவனுக்கு வலை

தன் மனைவியுடன் கள்ள உறவு வைத்திருந்த பொலிஸ் காரர் ஒருவரை கடத்திச் சென்று சித்திரவதைக்கு உட்படுத்தி அவரின் காது, மூக்கு, உதடுகளை அறுத்த கணவரை பாகிஸ்தான் பொலிஸார் தேடி வருகின்றனர்பா.

கிஸ்தான்கின் பஞ்சாப் மாகாணம் ஜங் மாவட்டத்தைச் சேர்ந்த காசிம் ஹயத் ஒரு பொலிஸ் காரர். இவரை, முகமது இப்திகர் என்பவர் கடத்திச் சென்று தனியிடத்தில் அடைத்து சித்ரவதை செய்துள்ளார்.



இது குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியதாவது: காசிமுக்கு, இப்திகர் மனைவியுடன் கள்ளத் தொடர்பு இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது தான் எடுத்த படங்களை காட்டி அந்தப் பெண்ணிடம் பணம் கேட்டு மிரட்டி வந்துள்ளார். இது பற்றி தெரியவந்ததும், இப்திகர் சமீபத்தில் காசிம் மீது பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். ஆனால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

பொறுத்துப் பார்த்த இப்திகர், தன் நண்பர்களுடன் சேர்ந்து காசிமை கடத்தி, அவருடைய காது, மூக்கு, உதடுகளை வெட்டி சித்ரவதை செய்துள்ளார். பொலிஸார் காசிமை கண்டுபிடித்தபோது மிக மோசமான நிலையில் இருந்தார்.

அமெரிக்கா



# கோல்ஃப் பந்துகளை விழுங்கியபாம்பு

ஒரு ஜோடி கோல்ஃப் பந்துகளை சாப்பிட்டுவிட்டு வேலியில் சிக்கிய பாம்பு ஒன்று மீட்கப்பட்டது. வடக்கு கொலராடோ வனவிலங்கு மையம், அந்த பாம்பை காப்பாற்றியுள்ளது.

அமெரிக்காவில் உள்ள கொலராடோ வனவிலங்கு மையத்தில் இருந்த பாம்பு,கோழி கூட்டில் தவறுதலாக வைக்கப்பட்டிருந்த கோல்ஃப் பந்துகளை கோழி முட்டை என்று நினைத்து விழுங்கிவிட்டது.

அதன் பின் வேலியின் மீது ஊர்ந்து செல்லும்போது பாம்பின் உடலில் இருந்த பந்தின் அளவால் வேலியின் இடையே மாட்டிக்கொண்டது. நீண்ட நேரம் போராடிக்கொண்டிருந்ததை பார்த்து வனவிலங்கு மையத்தின் அதிகாரிகள் அதை மீட்டு காப்பாற்றியுள்ளனர்.

வாஷிங்டன்

# அமெரிக்க சபாநாயகர் தைவான் செல்வாரா?

அமெரிக்க பாராளுமன் சபாநாயகர் நான்சி பொலேசி. இவர் அரசு முறை பயணமாக மலேசியா, சிங்கப்பூர், தென்கொரியா, ஜப்பான் ஆகிய ஆசிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். மலேசியா வந்தடைந்த நான்சிக்கு அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். இதனை தொடர்ந்து சிங்கப்பூர் சென்ற நான்சி சிங்கப்பூர் ஜனாதிபதி, பிரதமரை சந்தித்தார்.

இந்நிலையில், ஆசிய பயணத்தின் ஒரு பகுதியாக நான்சி பொலேசி தைவான் சென்று அந்நாட்டு ஜனாதிபதி டிசைங் வென்னை சந்திக்க உள்ளதாகவும் தகவல்



வெளியாகியுள்ளது.

சீனாவில் இருந்து பிரிந்த தைவான் சுதந்திர நாடா அறிவித்துள்ள நிலையில் அதை சீனா ஏற்றுக்கொள்ளவில்லை. தைவான் மீது படையெடுத்து நாட்டுடன் இணைத்துக்கொள்வோம் என்றும் சீனா தொடர்ந்து மிரட்டி வருகிறது.

சீனாவின் போர் விமானங்கள் அவ்வப்போது தைவான் வான் எல்லைக்குள் நுழையும் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது.

ஸ்லேபிங் கிங்ஸ் வி.க தொடர்:

# சம்பியனானது விக்டரி ஜூனியர்

■ எம்.யூ.எம். சனூன்

கற்பிட்டி ஸ்லேபிங் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த அணிக்கு 11 வீரர்கள் கொண்ட விலகல் முறையிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் விக்டர் ஜூனியர் சம்பியனானது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற புத்தளம் மாவட்டத்தின் தலைசிறந்த 30 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்கேற்றிருந்த இத்தொடரின் இறுதிப் போட்டியில் பாலக்குடாவை வென்று ஜூனியர் சம்பியனாயிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஜூனியர்ஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.



அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாலக்குடா 5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு, 59 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஜூனியர்ஸ் 4.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சப்னி தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 03 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.